**INTERNATIONAL INDIAN SCHOOL,**
**DAMMAM MIDDLE SECTIONS (BMS/GMS)**
**ANNUAL EXAM - WORKSHEET 2024-25**

**CLASS: 7** **SUBJECT: TAMIL**

---

**பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

**ஒரு** நாள் மாலை முத்துவின் வீட்டிற்கு அவனுடைய நண்பர்களான கென்னடியும் அன்வரும் விளையாட வந்தனர். பிறந்து சில நாள்களே ஆன நான்கு நாய்க் குட்டிகளைத் தோட்டத்தில் கண்டனர். நாய்க் குட்டிகளைத் தங்கள் வீட்டிற்குக் கொண்டு செல்ல விரும்பினர். இருவரும் ஆளுக்கொரு நாய்க் குட்டியைத் தூக்கிக் கொண்டனர். முத்து அவர்களிடம், "நண்பர்களே, பால் குடிக்கும் இந்தக் குட்டிகளைத் தாயிடமிருந்து பிரிக்க வேண்டா. நம்மை நம் பெற்றோரிடமிருந்து யாராவது பிரித்தால் நாம் எவ்வளவு துன்பப்படுவோம், சிந்தித்துப் பாருங்கள்" என்று கூறினான். நண்பர்கள் அமைதியாக நாய்க்குட்டிகளைக் கீழே இறக்கிவிட்டனர். நாய்க் குட்டிகள் மகிழ்ச்சியாகத் தம் தாயோடு விளையாடுவதை நண்பர்கள் மூவரும் பார்த்து மகிழ்ந்தனர்.

விடை தருக.

1. முத்துவின் தோட்டத்தில் எத்தனை நாய்க்குட்டிகள் இருந்தன?
2. நண்பர்கள் இருவரும் முத்துவின் வீட்டிற்கு எதற்காக வந்தனர்?.
3. கென்னடியும் அன்வரும் என்ன செய்ய விரும்பினர்?
4. நண்பர்களுக்கு முத்துவின் அறிவுரை என்ன?
5. நண்பர்கள் நாய்க்குட்டிகளை எடுத்துச் சென்றனரா? ஏன்?.

## வழு

கீழ் காண்பவை எவ்வகை வழு எனக் கூறுக.

1. நாளை வந்தாள்
2. தருமன் உண்டேன்
3. கீரிக்குட்டி
4. நன்றாக உண்டாயா , இப்பொழுதுதான் வந்தேன்.
5. நான் கேட்டாய்
6. முட்டையிட்டது கோழியா , சேவலா ,
7. கண்ணகி சிரித்தான்
8. நாவரசன் உண்டது
9. கழுதை அழுதான்
10. மாதவி கேட்டான்

அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க.

1. நீ பாடினாய் (இட வழு ஆக்குக)
2. குமணன் படித்தாள் (வழு நீக்கி எழுதுக)
3. மாணவர்கள் ஓடினர் (பால் வழு ஆக்குக)
4. கூவியது குயில். மயில் அல்ல. (வினா வழு ஆக்குக)

5. வேலன் வந்தானா, (விடை வழு தருக)
6. வெண்மையானது புறா. காக்கை அல்ல.) (வினா வழு ஆக்குக)
7. வளவன் படித்தான் (திணை வழு ஆக்குக)
8. சோழன் வென்றான் (பால் வழு ஆக்குக)
9. கடலில் இருப்பது நீரா, பாலா, (வழு நீக்கி எழுதுக.)
10. பள்ளிக்குச் சென்றாயா, கோயிலுக்குச் சென்றேன். (வழு நீக்கி எழுதுக)

## அறுவகைப் பெயர்ச்சொற்கள் :

### இலக்கண குறிப்பு தருக

1. நாற்காலி
2. கண்ணன்
3. தமிழரசி
4. ஆடு
5. மலை
6. மைதானம்
7. சுரங்கம்
8. தை
9. கபாலம்
10. பாடினாள்
11. கருங்குயில்

### சான்று தருக.

1. பொருட்பெயர்
2. இடப்பெயர்
3. காலப்பெயர்
4. சினைப்பெயர்
5. பண்புப்பெயர்
6. தொழிற்பெயர்

### நிரப்புக.

1. காலத்தின் பெயரைக் குறிப்பது---------------------------
2. திருச்சிராப்பள்ளி என்பது--------------------------------------
3. பெயர்ச்சொல்-------------------------------------------------------

### அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க

1. வெண்ணிலா( பண்புப்பெயரை எழுதுக)
2. சித்திரைத் திருவிழா (காலப்பெயரை எடுத்து எழுதுக)
3. நான் கடற்கரைக்குச் சென்றேன் (இடப்பெயரை எடுத்து எழுதுக)
4. கிளி அழகானது (பண்புக் பெயர் சேர்த்து எழுதுக)
5. குழி (பண்புப் பெயர் சேர்த்து எழுதுக)

## பண்புப் பெயர்

### சான்று தருக:

1. நிறப்பண்பு பெயர்
2. அளவுப் பெயர்
3. வடிவப் பண்புப்பெயர்
4. சுவைப் பண்புப்பெயர்
5. குணப் பண்புப்பெயர்

### இலக்கண குறிப்பு தருக:

1. வெண்தாமரை
2. கருங்குதிரை
3. பச்சிலை

4. வெண்குடை
5. கருங்கூந்தல்
6. முப்பால்
7. குறுங்கோல்
8. இன்சுவை
9. நற்செயல்
10. வட்டப்பாதை
11. ஆறுமுகத்தான்
12. செங்காலன்னம்

## போலி

கூறியவாறு செய்க

1. அரைசன் (எவ்வகைப்போலி)
2. நிலம் (போலி ஆக்குக)
3. அறன் (போலி நீக்கி எழுதுக)
4. மைஞ்சு (போலி நீக்கி எழுதுக)

சான்று தருக.

1. முதற்போலி
2. இடைப்போலி
3. கடைப்போலி
4. முற்றுப்போலி

இலக்கண குறிப்பு தருக

1. அஞ்சு
2. முன்றில்
3. இலைஞ்சி
4. மைஞ்சு
5. மையல்
6. இலைஞ்சி
7. அரைசியல்

நிரப்புக:

1. ஓர் எழுத்து நிற்க வேண்டிய இடத்தில் மற்றோர் எழுத்து வந்து பொருள் மாறாமல் நின்றால் அது -----------------------------எனப்படும்
2. போலி -----------------------வகைப்படும்
3. முதல் இடை கடை எழுத்துகள் மாறி வந்தும் பொருள் மாறாமல் நிற்பது------------- போலி
4. ஈற்றுப்போலி என அழைக்கப்படுவது -------------- ஆகும்

## மரபுச்சொற்கள்

மரபு வழு நீக்கி எழுதுக.

1. பால் குடி
2. புலிக்குட்டி
3. சிங்கக்குட்டி
4. தீ வை
5. கோழி கூவும்
6. ஆந்தை அகவும்
7. தாழை இலை
8. கமுகு இலை
9. தென்னஞ்செடி
10. மான்குட்டி
11. மாட்டுக் கூடு
12. குதிரை கத்தும்

சான்று தருக.

1. முற்றுப்போலி
2. நிறப்பண்புப்பெயர்
3. இடப்பெயர்
4. தென்னையின் இளமையைக் குறிக்கும் சொல்
5. திணை வழு
6. இடைப்போலி
7. சினைப்பெயர்
8. சிங்கத்தின் ஒலிமரபுச்சொல்
9. முன்பின்னாகத் தொக்க போலி
10. சுவைப்பண்புப் பெயர்

<u>எண் பெயர்</u>

எழுத்தால் எழுதுக.

1. 87654
2. 76890
3. 24658

திருக்குறள்

பொருள் எழுதுக

1. ஆன்ற
2. நயன்
3. புக்கு
4. மாய்வது
5. அரம்
6. நன்பால்

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. 'ஆன்ற' - இச்சொல்லின் பொருள்...................

   அ) உயர்ந்த　ஆ) பொலிந்த　இ) அணிந்த　ஈ) அயர்ந்த

2. பாடலில், நேர்மை என்னும் பொருள் தரும் சொல் ...............

   அ) நயன்　ஆ) நன்றி　இ) பயன்　ஈ) பண்பு

3. .பெருஞ்செல்வம் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........

   அ) பெருஞ் + செல்வம்　ஆ) பெரும் + செல்வம்

   இ) பெருமை + செல்வம்　ஈ) பெரு + செல்வம்

4. பண்புடைமை - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   அ) பண் + புடைமை　ஆ) பண்பு + புடைமை

   இ) பண்பு + உடைமை　ஈ) பண் + உடைமை

5. அது + இன்றேல் - இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ............
   அ) அது இன்றேல்  ஆ) அதுயின்றேல்
   இ) அதுவின்றேல்  ஈ) அதுவன்றேல்

6. திருக்குறள் ................ எனப் போற்றப்படுகிறது.
   அ) உலகப்பொதுமறை  ஆ) பதினெண்கீழ்க்கணக்கு
   இ) அறத்துப்பால்  ஈ) பண்புடைமை

கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக. இவ்விரண்டும்

1. இவ்விரண்டும் =
2. மக்கட்பண்பு =

உயிரெழுத்தில் தொடங்கும் சொற்களை எழுதுக.

பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக

ஈற்றில் ‘மை’ என முடியும்படி நான்கு சொற்கள் எழுதுக.

வினாக்களுக்கு விடையளிக்க.
1. பண்புடையவராக வாழ்வதற்குரிய நல்ல செயல்கள் யாவை?
2. ‘மரம் போன்றவர்’ எனத் திருக்குறள் யாரைக் குறிப்பிடுகிறது?.
3. பண்பில்லாதவன் பெற்ற செல்வம் எவ்வாறு பயனிலாது போகும்?

## உழவுப் பொங்கல்

பொருள் எழுதுக.
1. எங்கணும்
2. ஏர்த்தொழில்
3. விழலாகும்
4. களித்து
5. இசைந்து
6. வையகம்

சரியான சொல்லைத் தேர்வு செய்து எழுதுக.
1. விழலாகும் என்பதன் பொருள்
   அ) வீணாகும்  ஆ) எங்கும்
   இ) பெருமை  ஈ) மகிழ்ந்து
2. நாமக்கல் வெ. இராமலிங்கனார் ............. என்றும் போற்றப்படுகிறார்.
   அ) தேசிய கவி  ஆ) காந்தியக் கவிஞர்
   இ) உவமைக் கவிஞர்  ஈ) புரட்சிக் கவிஞர்

3. தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞர் ..............

அ) பாரதிதாசன் ஆ) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

இ) கண்ண தாசன் ஈ) நாமக்கல் வெ. இராமலிங்கனார்

பிரித்து எழுதுக.

1. நலனெல்லாம்.................
2. நிறைந்தறம்.......................

எதிர்சொல் எழுதுக

1. இன்பம்...................

நிரப்புக

1. **நாமக்கல் வெ. இராமலிங்கனார் ............ என்றும் போற்றப்படுகிறார்.**
2. **தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞர் ..............**

பாடலில் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எழுதுக

பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எழுதுக

பாடலில் ஒரே ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுக.

**வினாக்களுக்கு விடையளிக்க.**

1. அனைவரும் இன்பமுடன் வாழத் தெம்பு தரும் தொழில் எது?
2. உழவுத்தொழிலால் என்னென்ன நன்மைகள் ஏற்படுகின்றன?
3. பொங்கலை நாம் எவ்வாறு கொண்டாட வேண்டுமெனக் கவிஞர் கூறுகிறார்?

## சிறுபஞ்சமூலம்

பொருள் கூறுக

1. வனப்பு -
2. கண்ணோட்டம் -
3. இத்துணை -
4. வேந்தன் -
5. வாட்டான் -
6. பண் -

சரியான சொல்லைத் தெரிவு செய்க :-

1. வனப்பு - இச்சொல்லின் பொருள் ……………………………………………….…
2. நன்றென்றல் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது………………………
3. என்று + உரைத்தல் - இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ………………..
4. கண்ணுக்கு அழகு """""""""""""
5. *பிறரிடம் பொருள் வேண்டிச் செல்லாமை ..........……………………… அழகு தரும்.*
6. *இது இவ்வாறு முடியும் என்று உறுதி செய்து கூறுதல் ............................ அழகு தரும்.*
7. *சிறுபஞ்சமூலம் .........................................................................நூல்களுள் ஒன்று.*
8. *சிறுபஞ்சமூலம் என்ற நூலை இயற்றியவர் ........…………………………………*

பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. கண்ணுக்குஅழகு | - | கேட்பவர் நன்று என்று சொல்லுதல் |
| 2. காலுக்கு அழகு | - | இவ்வளவுதான் என உறுதி செய்து கூறல் |
| 3. ஆராய்ச்சிக்கு அழகு | - | நாட்டு மக்களை வருத்தாமை |
| 4. இசைக்கு அழகு | - | பிறரிடம் சென்று கேட்காமை |
| 5. அரசனுக்கு அழகு | - | இரக்கம்காட்டல் |

பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக :-

விடையளி

1. கண்ணுக்கு எது அழகு ?
2. காலுக்கு எது அழகைத் தருகிறது ?
3. அரசனுக்கு அழகைத் தருவது எது ?

கூடுதல் வினாக்கள்

4. *சிறுபஞ்சமூலத்தில் குறிப்பிடப்படும் வேர்கள் யாவை?*
5. *சிறுபஞ்சமூலம் கூறும் அழகுகளை எழுதுக*

## உரைநடை – விதைத் திருவிழா

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. அனுமதி - இச்சொல் குறிக்கும் பொருள் -----------------------------------
   அ) கட்டளை ஆ) இசைவு
   இ) வழிவிடு ஈ) உரிமை

2. விளம்பரத்தாள்கள் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........................
   அ) விளம்பர + தாள்கள் ஆ) விளம்பரத்து + தாள்கள்
   இ) விளம்பரம் + தாள்கள் ஈ) விளம்பு + தாள்கள்

3. ஆலோசித்தல் - இச்சொல்லுக்குரிய பொருள் .........................
   அ) பேசுதல் ஆ) படித்தல்
   இ) எழுதுதல் ஈ) சிந்தித்தல்

4. தோட்டம் + கலை - இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது .......................

அ) தோட்டம்கலை ஆ) தோட்டக்கலை

இ) தோட்டங்கலை ஈ) தோட்டகலை

5. பழங்காலம் இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல் .........................

அ) பழைய காலம் ஆ) பிற்காலம்

இ) புதிய காலம் ஈ) இடைக்காலம்

கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

அ) வழிபாடு + கூட்டம் =

ஆ) வீடு + தோட்டம் =

கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.

அ) அழைப்பிதழ்-

ஆ) விதைத்திருவிழா-

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. விதைத்திருவிழாவில் அமைக்கப்பட்டிருந்த அரங்குகளின் எண்ணிக்கை----
2. விதைகள் --------------------------------------------ஆனவையாக இருத்தல் வேண்டும்.
3. கொண்டைக்கடலை என்பது ------------------------------------------------------------ ஒன்று.

விடையளி :-

1. மாணவர்களை எங்கே அழைத்துச் செல்வதாகத் தலைமையாசிரியர் கூறினார் ?
2. ஆசிரியர் வழங்கிய துண்டு விளம்பரத்தாளில் என்ன செய்தி இருந்தது ?
3. 'பாதிப்பு' என்று எழுதப்பட்ட அரங்கில் என்ன செய்தி சொல்லப்பட்டது ?
4. நவதானியங்கள் எவை ?

"வாரித் தந்த வள்ளல்"

பொருள் கூறுக.

1. ஐயன்
2. கொற்றவன்
3. கோமகன்
4. வறுமை
5. இல்லாள்
6. துயர்
7. குன்றாப் புகழ்
8. சுற்றத்தார்

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. பொற்காசு - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .........

அ) பொற் + காசு ஆ) பொல் + காசு

இ) பொன் + காசு ஈ) பொ + காசு

2. கொடைத்திறம் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ......................

அ) கொடை + திறம் ஆ) கோடை + திறம்

இ) கொட + திறம் ஈ) கொடு + திறம்

3. களிறு என்பது .................. யைக் குறிக்கும்

அ) குதிரை ஆ) கழுதை

இ) யானை ஈ) ஒட்டகம்

4. தரணி - இச்சொல்லின் பொருள் .....................

அ) மலை ஆ) உலகம்

இ) காடு ஈ) வானம்

5. சோறு' இச்சொல்லுடன் பொருந்தாதது .................

அ) உணவு ஆ) அமுது

இ) அன்னம் ஈ) கல்

6. வல்வில் ஓரி ஆட்சி செய்த மலை ....................

அ) கொல்லி மலை ஆ) மதுரை

இ) தகடூர் ஈ) தஞ்சை

7. குறைவின்றி - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............

அ) குறைவு + இன் ஆ) குறைவு + இன்றி

இ) குறை + இன்றி ஈ) குறை + இன்று

பொருத்துக

1. பேழை - வாசல்
2. மாரி - கடன்
3. வாயில் - பெட்டி
4. ஆணை - மழை
5. இரவல் - கட்டளை

பிறமொழிச் சொற்கள் கலவாமல் எழுதுக.

1. என்னுடைய புக் டேபிளில் உள்ளது.

2. நான் டிவியில் நியூஸ் பார்த்தேன்.

3. தை மாதம் பர்ஸ்ட் நாள்

4. பொங்கல் பெஸ்டிவேல் கொண்டாடினான்.

5. பாலன் ஸ்நாக்ஸ் சாப்பிட்டான்.

விடையளி :-

1. பாணனின் குழந்தைகள் பசியால் வாடக் காரணம் என்ன ?
2. வல்வில் ஓரியின் சிறந்த பண்பு யாது ?
3. பரிசு பெற்ற பாணன் மன்னனை எவ்வாறு வாழ்த்தினான் ?

கோடிட்ட இடத்தை நிரப்புக

1. கண்ணுக்கு அழகு பிறரிடம் ------------------------------------------- காட்டல்.
2. சிறுபஞ்ச மூலம் ----------------------------------- என்பவரால் எழுதப்பட்டது.
3. வாரிக் கொடுக்கும் வள்ளல் -------------------------------------------------------.
4. நாட்டு மக்களை -------------------------------------------- மன்னருக்கு அழகு

தொடர் அமைக்க

1. பொருளுதவி
2. திறமைசாலி
3. நம்பிக்கை
4. வான்புகழ்

எழுதுதல்

1. குடிநீர் வசதி செய்து தர வேண்டி பஞ்சாயத்து தலைவருக்குக் விண்ணப்பம் எழுதுக

அல்லது

விடுமுறையை கழிக்க வருமாறு நண்பனுக்கு கடிதம் எழுதுக.

1. தலைமைப் பண்பு- துணைப்பாட கட்டுரை.
2. பொங்கல் திருவிழா என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக

---

